සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை 2011(2012)**

# Open / Limited Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Planning Service - 2011 (2012)

(05) **விடயம் சார்ந்த அறிவு**
Case Study

*ஒரு மணித்தியாலம்*
*One hour*

**எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

**1.** மாகாண சபையொன்றின் கீழுள்ள பிரதான அமைச்சொன்றின் திட்டமிடல் பிரிவின் தலைவராக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் எனக் கருதுங்கள். ஆளுனரின் தலைமையில் நடைபெறும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள உங்களுக்கு நேர்ந்துள்ளது. இக்கூட்டத்தின் போது மாகாண சபையின் கீழ் தற்போது செயற்படுத்தப்படுகின்ற எல்லாச் செயற்றிட்டங்களினதும் முன்னேற்றம் பற்றி மீளாய எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு உங்கள் அமைச்சின் கீழ் உள்ள மூன்று செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை முன்வைக்க வேண்டி உள்ள போதிலும் அதற்கு உங்களுக்குக் குறுகிய கால அவகாசமே தரப்பட்டுள்ளது. இந்நிலையைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு செயற்றிட்டம் தொடர்பான தகவல்கள் அடங்கும் சாராம்சத்தின் அட்டவணையொன்றைத் தயாரிக்க உங்களுக்கு நேரிட்டுள்ளது. அடிப்படை விடயங்களை நீங்கள் முன்வைக்கும் அதேசமயம் மூன்று செயற்றிட்டங்களினதும் விரிவான முன்னேற்றத்தைக் காட்ட உதவும் குறிப்பொன்றாக மேற்படி அட்டவணையைக் கூட்டத்தில் பங்குபற்றுபவர்கள் மத்தியில் விநியோகிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

(i) முன்னேற்ற மீளாய்வுக்கூட்டத்தில் மேற்படி செயற்றிட்டங்கள் தொடர்பாக உங்களால் முன்வைக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள் யாவை எனக் குறிப்பிடுங்கள். (10 புள்ளிகள்)

(ii) மூன்று செயற்றிட்டங்கள் தொடர்பாக மேலே இனங்காணப்பட்ட அடிப்படை விடயங்களைச் சாராம்சமாகத் தருவதற்குப் பொருத்தமான அட்டவணையொன்றைத் தயாரிக்க. (15 புள்ளிகள்)

(iii) மேற்படி கூட்டத்தில் வெளிநாட்டு உதவிகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய தேசிய மட்டத்திலுள்ள பல்வேறு நிறுவனங்களின் பணிக்கூறுகள் பற்றிய உங்களிடம் வினவ இடமுண்டு. வெளிநாட்டு உதவிகளின் கீழ் செயற்றிட்டங்களைச் செயற்படுத்தும்போது கடக்க வேண்டிய அடிப்படைச் செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன. மேற்படி ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய மட்டத்திலான நிறுவனத்தை/ நிறுவனங்களைப் பெயரிடுக. (இதற்கான விடையை உங்கள் விடைத்தாளில் எழுதுக.)

| | **செயற்பாடு / ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு** | **பொறுப்பு வழங்கப்பட்டுள்ள நிறுவனம்/ நிறுவனங்கள்** |
|---|---|---|
| (1) | செயற்றிட்டத்தை இனங்காணலும் விரிவான ஆலோசனைகளைத் தயாரித்தலும் | |
| (2) | செயற்றிட்ட ஆலோசனைகளின் நிதிசார், பொருளாதாரஞ் சார், சமூகஞ்சார் சாத்தியக்கூற்றைக் கணிப்பிடல் | |
| (3) | ஆரம்ப அங்கீகாரத்தைப் பெறல் | |
| (4) | கடன் வழங்கும் நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தை நடாத்துதல் | |
| (5) | உத்தேச வெளிநாட்டு நிதிக்கடன் ஊடாக நாட்டின் நிதி நிலைமைகளின் மீது ஏற்படும் செல்வாக்கைக் கணிப்பிடல் | |
| (6) | இறுதி அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல் | |
| (7) | கடன்/உதவி ஒப்பந்தங்கள் தொடர்பான சட்டரீதியான நிலைமைகள் பற்றிய அறிவுரைகளைப் பெற்றுக் கொடுத்தல் | a.<br>b. |
| (8) | அவற்றைச் செயற்படுத்தல் | |
| (9) | ஆய்வுகளும் மேற்பார்வையும் | a.<br>b. |
| (10) | இறுதி கணக்காய்வு வேலைகளை நடாத்துதல் | |

(20 புள்ளிகள்)

(iv) வெளிநாட்டு நிதிக்கடனின் கீழ் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்ற செயற்றிட்டங்களின் நிதி ரீதியான, பொருளாதார ரீதியான வாழ்தகவைத் (viability) தீர்மானிக்க அவற்றை முழுமையாக தெரிவிற்கு உட்படுத்தி மதிப்பிட வேண்டும். இதன்படி செயற்றிடமொன்றை கணிப்பிட பயன்படுத்தக்கூடிய நுட்பமுறைகள் **நான்கைக்** குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

(v) செயற்றிட்டமொன்றின் பிரதான செயற்பாடுகள், முடிவுகள், திடீர் விளைவுகள், நீண்ட கால பெறுபேறுகள், அவற்றை அளக்கப் பயன்படுத்தும் சுட்டிகள் ஆகியன முறைசார் முறையில் கீழே காட்டப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள அட்டவணையை உங்கள் விடைத்தாளில் பிரதி செய்து அதனைப் பயன்படுத்தி அவற்றை அந்தந்த குழுக்களாகத் தொகுக்க.

* உயர் விளைத்திறன் -
* தரமிக்க உயர் வாழ்க்கை நிலை
* எரிபொருளைச் சிக்கனப்படுத்தல்/ மீதமாதல்
* பயண நேரம் மீதமாதல்
* கொழும்பு நகரில் வாகன நெருக்கடி குறைந்து வாகனப் போக்குவரத்து சீரடைதல்
* தனி நபர் மொத்த தேசிய உற்பத்தி
* சொந்த வாகனம் உள்ள மக்களின் சதவீதம்
* கொழும்பு நகரில் வளி மாசடைதல் இழிவாதலும் வளியின் தரம் முன்னேற்றமடைதலும்
* கொழும்பு நகரில் மோட்டார் வாகனங்களின் சராசரி பயண வேகம் (மணிக்கு கி.மீ.)
* கொழும்பு நகரில் மோட்டார் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு விகிதம் (லீற்றருக்கு கி.மீ.)
* பம்பலப்பிட்டியிலிருந்து கோட்டை வரை பயணத்திற்கான சராசரி நேரம் (நிமிடங்களில்)
* கொழும்பு நகரில் வளியில் ஈயத்தின் அளவு
* கொழும்பு நகரில் விருத்தி செய்யப்பட்ட தன்னிச்சையாக இயங்கும் போக்குவரத்து சமிக்சை தொகுதிகளும் அவை நன்றாக இயங்குதலும்
* போக்குவரத்து நெருக்கடி மிக்க நேரங்களில் வாகனங்கள் நகரினுள் பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு முறையியல் செயற்படுதல்
* கொழும்பு நகரில் புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட 50 கி.மீற்றர் நீளமான பாதைகள்
* கொழும்பு நகரின் 50 கி.மீற்றர் தூரமான பாதைகளில் புதிதாக பாதுகாப்பு வேலிகள் கட்டப்படல்
* பாதை சமிக்கைகளைக் கடக்க எடுக்கும் நேரம் 10% ஆல் குறைதல்
* புதிதாக வேலி அமைக்கப்பட்ட பாதைகளின் பெயர்களும் அவற்றின் நீளங்களும் (கி.மீ.)
* வாகனங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள மணித்தியாலங்களில் நகரினுள் பிரவேசிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை
* 500 பொலிஸ் அலுவலர்களுக்கு போக்குவரத்து சட்டதிட்டங்கள் பற்றிய பயிற்சி வழங்கல்
* திருத்தியமைக்கப்பட்ட பாதைகளின் நீளம் (கி.மீ.)
* கொழும்பு நகரில் தன்னிச்சையாக இயங்கும் பாதை சமிக்கைத் தொகுதிகளை மேம்படுத்தல்
* அதிக போக்குவரத்து நெருக்கடியுள்ள மணித்தியாலயங்களில் கொழும்பு நகரின் பிரதான பாதைகளில் வாகன போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் முறையியல் ஒன்றுக்கான சட்டங்களைத் தயாரித்தல்
* கொழும்பு நகரில் பழுதடைந்த 50 கி.மீற்றர் பாதைகளைத் திருத்தியமைத்தல்
* கொழும்பு நகரில் போக்குவரத்து வாகன கடமைகளில் ஈடுபடுகின்ற பயிற்றப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை
* கொழும்பு நகரில் இனங்கண்ட பாதைகளின் இருமருங்கிலும் பாதுகாப்பு வேலிகளை உருவாக்கல்
* பயிற்சி பெற்ற 500 பொலிஸார் பாதை போக்குவரத்து வாகனக் கடமைகளில் ஈடுபடல்

| நெடுநாளைய பெறுபேறுகள், உடனடி பெறுபேறுகள், முடிப்பு மற்றும் செயற்பாடுகள் | சுட்டி |
|---|---|
| **நெடுநாளைய பெறுபேறுகள்**<br>1.<br>2. | <br>1.<br>2. |
| **உடனடி பெறுபேறுகள்**<br>1.<br>2.<br>3.<br>4. | <br>1.<br>2.<br>3.<br>4. |
| **முடிப்பு**<br>1.<br>2.<br>3.<br>4.<br>5. | <br>1.<br>2.<br>3.<br>4.<br>5. |
| **செயற்பாடுகள்**<br>1.<br>2.<br>3.<br>4.<br>5. | |

(45 புள்ளிகள்)

* * *